2016 ஆகஸ்ட் 9]

44—

விடுதி

***1003—திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆதி திராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வரலாற்றைப் படித்தவர்கள் மத்தியில், வரலாறாகவே வாழ்பவர் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் வாழ்வை தலைநிமிரச் செய்த அம்மா அவர்கள் எங்களுக்கு பிரம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் சேவையை பாராட்டுபவர்களுக்கு சேவை வரி விதித்தால் இந்தியாவின் கடனை இன்றே அடைக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

Gandhi, Father of Nation *விலையில்லா அரிசி தந்த மாண்புமிகு அம்மா அவர்கள்* Mother of Ration *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Gandhi, Father of Nation, *விலையில்லா அரிசி தந்த மாண்புமிகு அம்மா அவர்கள்* Mother of Ration. *மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மாவின் திருவடி வணங்கி, திருத்திய பதிலை அளிக்கிறேன்.*

ஆதி திராவிட மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காகச் செயல்படுவதே விடுதிகள். பல்வேறு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் தங்கிப் பயனடைவர். அவ்வகையில், நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மாணவ, மாணவியர்களுக்கு விடுதி தோற்றுவிக்கப்படுவது குறித்த செயற்குறிப்பு பெறப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை, நிதி நிலைமை மற்றும் துறையின் ஆய்வறிக்கை ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவையின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். இளைஞர்களின் எழுச்சி நாயகன், நாளைய தமிழகம், எங்கள் தளபதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

கூடலூர் தொகுதிக்குட்பட்ட, தேவாலா அரசு மேல்நிலைப் பள்ளி, தென்னிந்தியாவின் சிரபுஞ்சியான தேவாலாவில் அமைந்திருக்கிறது. இந்தப் பள்ளியில் தற்போது 323 மாணவிகளும், 373 மாணவர்களும் என மொத்தம் 696 மாணவ, மாணவியர்கள் படித்துக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் நாடுகாணி, பொன்னூர், கரியசோலை, தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகம் போன்ற பகுதிகளிலிருந்து வருகிறார்கள். அதுவும் பேருந்து வசதி குறைவாக உள்ள பகுதிகளிலிருந்தும், வன விலங்குகளின் தொல்லைகளுக்கு இடையிலேயும் பள்ளிக்கு வந்து செல்கின்றார்கள். இவர்கள் 8 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து படிக்க வந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், 85 percent *ஆதி திராவிட மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்கு நல்ல ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கும்வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் இருபாலர்களுக்கும் விடுதி ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அருகிலே,* GTRS *நடுநிலைப் பள்ளியில், விடுதி கட்டுவதற்கு இடம் இருக்கிறது. அதைப்போல, அரசு நடுநிலைப் பள்ளியிலும் இடம் இருக்கிறது. அந்த வளாகத்திலே, இந்தக் கல்வியாண்டிலேயே ஆதி திராவிட மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயிலும் விடுதியைக் கட்டித் தருவாரா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விழைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலை கலங்கினும், நிலை கலங்காத அரசியல் உலகின் மாதரசி, எதிர்கால இளைஞர்களின் இலட்சிய அடையாளம், எங்கள் அம்மா அவர்களின் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் மட்டும் 74 விடுதிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 30 மாணவர் விடுதிகள், 44 மாணவியர் விடுதிகள் உள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், தேவாலா மேல்நிலைப் பள்ளியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் கல்வி பயின்று வருவதாகத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அங்கு விடுதி கட்டித் தருமாறு வேண்டியுள்ளார். நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் 21 விடுதிகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. இருப்பினும், மாணவர்களுடைய எண்ணிக்கை, இடவசதி, நிதி ஒதுக்கீடு, துறையின் ஆய்வறிக்கை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான அனுமதியோடு, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்ற வழிவகை செய்யப்படும் என்பதை மீண்டும், மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் தொகுதிக்குட்பட்ட பாரதியார் உறுப்புக் கல்லூரியில் கிட்டத்தட்ட 3,800 மாணவர்கள் படிக்கின்றார்கள். இவர்கள் 30 கிலோ மீட்டர், 40 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து படிக்க வருகின்றார்கள். இவர்களில் கிட்டத்தட்ட 60 விழுக்காடு மாணவர்கள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு அங்கே ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக விடுதி வசதி இல்லை. அங்கே விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். மேலும், ஆதி திராவிடர் நலத் துறை சார்பாக இயங்குகின்ற ஊட்டி அரசு கலைக் கல்லூரி மாணவ, மாணவியர்

விடுதியில் PG Course படிப்பவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அதற்கும் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை தமிழகத்தின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதனை நிறைவேற்ற வாய்ப்பு இருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்றுதான் இது குறித்த ஓர் அறிவிப்பை என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் எதிர்கட்சித் தலைவர் கேட்டதற்கு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன் அல்லவா? நீங்கள் கொடுத்த அறிவிப்பு என் பரிசீலினையில் இருக்கிறது. உரிய நேரத்தில் நான் அது குறித்து சொல்கிறேன்.*